**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 417/2011 LW- 3 PW- 5

| | |
|---|---|
| Name | ஜெயக்குமார் |
| Husband/Father Name | ரங்கநாதன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | வனச்சரக அலுவலர் |
| Age | 57 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 02.10.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிகள் 2, 7 ஆஜர். எதிரிகள் 3, 5, 6 ஆஜரில் இல்லை. எதிரிகள் 3, 5, 6 சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது 1 மற்றும் 4 எதிரிகள் இறந்துவிட்டனர் )**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சாயல்குடி, ராமநாதபுரம் மாவட்டத்தில் வனசரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.12.2010 அன்று திருவலம் சமூக காடுகள் சரகத்தில் வனவராக பணிபுரிந்த போது வனசரக அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காலை 7.00 மணியளவில் வனசரக அலுவலர் காளிதாஸ், வனவர் பாலாஜி, வனகாப்பாளர் ஆறுமுகம் மற்றும் ரேணுகோபால், வனக்காப்பாளர் நானும் காரையிலிருந்து புளியங்கண்ணு செல்லும் சாலையில் நௌளாலாக் கூட்ரோடு அருகே கண்காணிப்பில் இருந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வெள்ளை நிற மாருதி ஆம்னி வாகனம் வந்தது அதை மடக்கிய போது அதன் ஓட்டுநர் தப்பி ஓடிவிட்டார்.

2. பின்பு வாகனத்திலிருந்த நபர்களை விசாரித்த போது அவர்கள் தங்கள் பெயர் பாலாஜி, ராஜசேகர், சரவணன், ராஜேஸ் என்று தெரிவித்தார்கள். அந்த வாகனத்தை சோதனை செய்த போது 12 செம்மரக்கட்டைகள் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களில் ராஜசேகர் என்பவரிடம் விசாரித்த போது செப்டம்பர் மாதம் மாம்பாக்கம் ஏரியிலிருந்து மூன்று செம்மரங்களை வெட்டி எடுத்து வந்து நௌலாக் அருகே உள்ள பாலாஜி என்பவரின் விவசாய நிலத்தில் பதுக்கி வைத்திருந்தனர்

3.சென்னையில் உள்ள ஒரு நபரிடம் விலை பேசி விற்றுவிட்டதாகவும் மீதமிருந்த கட்டைகளை காரில் ஏற்றி வந்ததாகவும் எதிரிகள் பாலாஜி மற்றும் அமிர்தராஜ் ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்து அதில் கையொப்பம் இட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பாலாஜி மற்றும் அமிர்தராஜ் ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலம்தான் நான் பதிவு செய்ததாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **ஒப்புதல் வாக்குமூலம் பு.சா.ஆ. 22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மற்ற எதிரிகளான ராஜேஷ், ராஜசேகரன், சரவணன் ஆகியோர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையொழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்துக்கள் முறையே **பு.சா.ஆ.23 முதல் பு.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு கைது செய்யப்பட்ட எதிரிகள், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான 12 செம்மரக்கட்டைகள், PY01F0643 என்ற பதிவெண் கொண்ட வேன் ஆகியவற்றுடன் வனச்சரக அலுவலகத்திற்கு வந்து படிவம் 95 நான் தயார் செய்து அதில் கையொப்பம் இட்டேன். சாட்சிக்காக உடன்

வந்த வனச்சரக அலுவலரிடம் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 95 தான் தயார் செய்ததாகும். அந்த படிவம் 95 **பு.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக வனசரகர் என்னை விசாரித்தார்.

**2 , 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

சம்பவ சமயத்தில் நான் இராணிப்பேட்டை வனசரகத்தில் பணி புரியவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் எப்படி சென்றேன் என்றால் இரண்டு அரசு துறை வாகனங்கள் மூலம் சென்றேன். வழக்கு தொடர்பாக சம்பவ இடம் சென்றேனா அல்லது ரோந்து பணிக்காக சென்றேனா என்றால் ரோந்து பணிக்காக சென்றேன். வனசரகர் காளிதாஸ் என்னை விசாரணை செய்த போது அவர் அழைத்ததன் பேரில் நான் சம்பவம் இடம் சென்றேன் என்றும் அரசு வாகனத்தில் சென்றேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் 3 மணிநேரம் இருந்து வாகனங்களை பரிசோதனை செய்து கொண்டிருந்தோம். எதிரிகள் எந்த வாகனத்தில் வந்தார்கள் எந்த நேரத்தில் பிடித்தேன் என்றால் காலை 7.00 – 7.30 மணிக்கு பிடிப்பட்டார்கள். டாடா ஏசி வாகனத்தில் வந்தார்கள். அந்த வாகனத்தின் பதிவெண் அதன் உரிமையாளர் பற்றி தெரிவித்துள்ளேனா என்றால் நான் தெரிந்துக்கொள்ளவில்லை. 1 மற்றும் 5 ம் எதிரிகள் பாலாஜி, அமிர்தராஜ் ஆகியோர்கள் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் வாகனத்தின் பதிவெண் மற்றும் உரிமையாளர் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் குடியிருப்பு நிறைந்த பகுதி மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். வழக்கு தொடர்பாக தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம், கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் அனைவரின் ஒப்புதல் வாக்குமூலமும் ஒரே நேரம் ஒரே தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற பின்னர் எதிரிகளை எங்கு அழைத்து சென்றோம் என்றால் வனசர அலுவலகத்திற்கு அழைத்து சென்றோம். படிவம் 95 எங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் வனச்சரக அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். நான் தயார் செய்த படிவம் 95 ல் எத்தனை கட்டைகள் மற்றும் அதன் நீளம் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் அதன் சுற்றளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகளை வனசரக அலுவலக்தில் ஒப்படைத்துவிட்டு கைது செய்து நீதிமன்றம் அனுப்பும் வரை உடன் இருந்தேனா என்றால் ஆமாம். அலுவலத்தில் செம்மரக்கட்டைகளை எடை போடும் போது உடன் இருந்தேன். செம்மரக்கட்டைகளை எடை போட்டு தயார் செய்த படிவம் 91 ல் நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் கைபற்றுதல் மகசர் தயார் செய்தார்களா என்றால் ஆமாம்.

கைபற்றப்பட்ட செம்மரக்கட்டைகள் எந்த சமூக காடுகளில் இருந்து வெட்டப்பட்டது என்றால் பானாவரம், மாம்பாக்கம், தகரகுப்பம் சமூக காடுகளில் இருந்து வெட்டப்பட்டதாகும். மேற்கூறிய காடுகளில் குறிப்பாக எந்த இடத்திலிருந்து எதிரிகள் வெட்டினார்கள் என்பதை எதிரிகள் கூறினார்களா என்றாலும் அதை நாங்கள் சென்று பார்த்தோமா என்றால் இல்லை. மேற்படி நான் கூறியிருக்கும் காடுகளிலிருந்து எதிரிகள் மரம் வெட்டினார்கள் என்று வாழைப்பந்தல், கலவை, சோளிங்கர், சிபகாட் ஆகிய காவல்நிலையங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் அந்த வழக்குகளில் அந்த காவல்நிலையங்கள் அந்த குற்ற எண்ணிற்கு போதிய முகாந்திரம் இல்லை என்று RCS தாக்கல் செய்து நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் எதிரிகளிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலும் பெறவில்லை என்றால் சரியல்ல. எங்களால் மேற்படி

சமூக காடுகளில் ஏற்பட்ட இழப்பை சரிசெய்ய எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் என் உயர் அதிகாரிகளுக்க பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்கூறிய குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்**

**7 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

7 ம் எதிரி நந்தகோபாலுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் மேல் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.12.03 10:28:42 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.